தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18.

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

பெறுநர்
காவல்துறை இயக்குநர்,
1, காமராஜ் சாலை,
பிஷப் கார்டன், மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

ந.க. 980/2022/கூ.தே.5 நாள்: 06.10.2022

ஐயா/அம்மையீர்,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – சட்ட ஒழுங்கு காரணம் காட்டி தேர்தல்கள் நிறுத்தப்படுதல் - தேர்தல் நடவடிக்கைகளின் போது உரிய பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் (Sufficient Police Bandobast / Protection) – தொடர்பாக.

****

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் (இனி சுருக்கம் கருதி ஆணையம்) 1983-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 1988-ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகள் (இனி சுருக்கம் கருதி முறையே சட்டம் மற்றும் விதி எனப்படும்) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு சட்டப்பிரிவு 33-A-ன் கீழ் அமைக்கப்பட்ட சட்டப்பூர்வ அமைப்பாகும் (Statutory Authority).

சட்டப்பிரிவு 33(11) - கீழும் விதி எண். 52, 52-A மற்றும் 53-ன்படியும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை சுதந்திரமாகவும், நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், அமைதியாகவும், ஒழுங்காகவும் (Free, Fair, Transparent, Peacefully and orderly) நடத்த வேண்டியது ஆணையத்திற்கேற்பட்ட சட்டப்பூர்வ கட்டளை மற்றும் கடமையாகும். (Statutorily mandated).

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் இதர வகை கூட்டுறவுச் சங்கங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்ட 14 இதர துறை தலைவர்களை மாநிலத் தேர்தல் அலுவலர்களாகவும், அத்துறைகளின் மாவட்ட அளவிலான அலுவலர்களை மாவட்டத் தேர்தல் அலுவலர்களாகவும் ஆணையம் நியமித்து கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை ஆணையம் நடத்தி வருகிறது.



Scanned with OKEN Scanner

ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் கீழ் வருபவை மிக முக்கியமானதாகும்.

விதி எண் 52-A(1)(a)-ல் கூறப்பட்டுள்ளதாவது:

*"வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபைகள் மற்றும் அலுவல் நிர்வாகிகளுக்கான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும். அதனால் அவசியமென கருதப்படும் அத்தகைய கட்டளைகள், மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது எந்த குற்றவியல் நிர்வாக நடுவர் அல்லது எந்த காவல் அதிகாரிக்கு வழங்க அதிகாரம் உண்டு."*

விதி எண் 52-A(5)-ல் கூறப்பட்டுள்ளதாவது:

*"மாவட்ட தேர்தல் அதிகாரிகள், வாக்காளர் பட்டியல் அலுவலர்கள், தேர்தல் அதிகாரிகள், வாக்குபதிவு அதிகாரிகள் மற்றும் இதர எந்த விதிகளின் கீழ் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகள், அப்போதைக்கு எந்த தேர்தல் நடைபெற மாநில அரசால் அமர்த்தப்பட்ட எந்த காவல் அதிகாரிகள், தேர்தல் ஆணையத்திற்கு அயல்பணியில் தொடக்க காலம் முதல் மற்றும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் தேதி முதல் அவை முடியும் வரை மற்றும் அத்தகைய தேர்தல் குறித்து அறிவிப்பு செய்யப்பட்ட தேதி முதல் மற்றும் அத்தகைய தேர்தல்கள் முடியும் தேதி வரை மற்றும் அந்த தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாடு மேற்பார்வை மற்றும் ஒழுங்கு முறைக்குட்பட்டவர்களாக அத்தகைய அதிகாரி, அந்த காலத்தில் அயல் பணிக்கு அனுப்பப்பட்டவராக கருதப்படுவார்."*

தமிழ்நாட்டில் பதிவாளர் மற்றும் இதர செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் 23,149 கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 2,01,76,638 வாக்காளர்கள் பங்கேற்கும் 2,35,062 நிர்வாகக் குழு பதவியிடங்களுக்கான (Vacancies) தேர்தல்களும், அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களுக்கான தேர்தல்களையும் ஆணையம் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது.



Scanned with OKEN Scanner

இவ்வகையில் ஆயிரக்கணக்கான சங்கங்களில், லட்சக்கணக்கான இடங்களுக்கு, கோடிக் கணக்கான வாக்காளர்கள் பங்கேற்கும் மிகப் பிரமாண்டமான கூட்டுறவுத் தேர்தல் நடவடிக்கைகளில் காவல்துறையினர் பங்கேற்பும், பங்களிப்பும் (Participation and Performance) மிக மிக முக்கியமானதாகும் என்றும் ஆணையம் உறுதியாகக் கருதுகிறது.

ஆயின், நடந்து முடிந்த 2018 ஒட்டு மொத்த தேர்தல்களில் பல நேர்வுகளில் சட்ட ஒழுங்கு காரணம்காட்டி மிகச் சாதாரணமாக (in a very casual manner) தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவற்றில் முக்கியமாக வேட்பு மனு தாக்கலின்போது ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம், சமூகவிரோதிகள் புகுந்து வேட்பு மனுவினை தாக்கல் செய்யவிடாமல் தடுப்பது, தேர்தல் அதிகாரியிடமிருந்து வேட்புமனு மற்றும் ஆவணங்களை பறிப்பது, கிழிப்பது போன்ற பல செய்கைகளினாலும், சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படலாம் என்று காவல்துறையினர் வாய்மொழியாக அறிவுறுத்தியதன் பேரிலும், கேட்டுக் கொண்டதன் பேரிலும், தேர்தல் அலுவலர்கள் பல சங்கங்களின் தேர்தல் நடவடிக்கையினை நிறுத்தி உள்ளார்கள்.

இவ்வகையில் நடந்து முடிந்த தேர்தலில் 115 சங்கங்களின் தேர்தல்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை அமர்வு மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை தலைவர்களாகக் (Chairman) கொண்ட கூட்டுறவு வழக்குகளுக்கான மண்டலக்குழுக்களும் இதனை கடுமையாக விமர்சித்துள்ளன.

நிறுத்தப்படும் தேர்தல்களை மீண்டும் நடத்திடும் நிலையில், அரசு, ஆணையம், சங்கம் ஆகிய அனைத்து தரப்பினருக்கும், காலம், பணம், பொருள் மற்றும் மனித சக்தி போன்றவை வீணாகிறது. இதனைக் கருத்திற் கொள்ளாது, சட்ட ஒழுங்கு காரணம் காட்டி தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதை ஆணையம் கவலையுடனும் கடுமையாகவும் நோக்குகிறது.

இவ்வகையில் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் சட்ட ஒழுங்கு காரணம் காட்டி நிறுத்தப்படாமல் தடுப்பதற்கும் தேர்தல் நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்காகவும் அமைதியாகவும் (orderly and peaceful) நடைபெறுவதற்கும் காவல்துறையின் போதுமான அளவு பாதுகாப்பும் திறமையான கையாளுதலும் (Sufficient and efficient Police bandobast and protection) வேண்டும் என ஆணையம் உறுதியாக கருதுகிறது.



Scanned with OKEN Scanner

இவ்வகையில், தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அனைத்து இடங்களிலும், அனைத்து தேர்தல் நடவடிக்கைகளின் போதும், (During the entire process of election) குறிப்பாக தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தகுந்த பாதுகாப்பும் மற்றும் தேர்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இடங்கள், தேர்தல் நடவடிக்கைகளான வேட்புமனுதாக்கல், பரிசீலனை, இறுதி பட்டியல் வெளியிடுதல், வாக்குப்பதிவு, ஓட்டு எண்ணுகை போன்ற முக்கியமான தேர்தல் நடவடிக்கைகளின்போது சட்ட ஒழுங்கு (Law and Order) பிரச்சனை ஏற்படாது கண்காணித்தல் மற்றும் வாக்குச்சீட்டு, வாக்குப்பெட்டி மற்றும் தேர்தலுக்கான சாதனங்கள் (Election Materials) போன்ற அனைத்திற்கும் போதிய பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு பிரச்சினை ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கும் நிலையில் நுண்ணறிவு பிரிவு (Intelligence Wing) மூலம் அவற்றினை முன்கூட்டியே அறிந்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல், சட்ட ஒழுங்கு பிரச்சினைகளைக் காரணமாகக் கொண்டும் எதிர்நோக்கியும் (Anticipation / Apprehension) காவல்துறை அலுவலர்கள் கேட்டுக்கொண்டதின் பேரிலும் தேர்தல் நடவடிக்கைகள் தேர்தல் அலுவலர்களால் நிறுத்தப்படுவதை தடுத்திடவும்/தவிர்த்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தவிரவும் சட்ட ஒழுங்கு பிரச்சினை காரணமாக தேர்தல் நிறுத்தப்படும் இனங்களில் அங்கு அச்சமயம் பணிப்பொறுப்பில் இருந்த காவலர்கள் தங்களது கடமையினைத் தவறாகச் செய்தோ, செய்யாமலிருந்தோ, (Commission / Omission / Dereliction of duty) தங்களது கடமையைச் செய்யத்தவறியுள்ளனர் என்ற நிலையில் கடமை தவறியவர்கள் மீது பணி இடை நீக்கம் போன்ற கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒழுங்கு நடவடிக்கை அவசர அவசியமென ஆணையம் கருதும் இனங்களில் விதி எண்.52-A(1)(a) மற்றும் 52-A(5)-ல் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கைக்கொண்டு உரிய கட்டளைகள் மற்றும் ஆணைகளை ஆணையம் வழங்கும். ஆணையத்தின் இந்த அறிவுரைகளின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்க தேர்தல் நடவடிக்கைகளில் சிறப்பாகப் பணியாற்றிட தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகளை வழங்கிடவும் ஆணையம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

ஒம்/-

ஆணையர்

6/10/22

ஆணையருக்காக

06.10.2022

நகல்

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை -10.
2. ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை, சென்னை-51.



Scanned with OKEN Scanner

3. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், சென்னை-35.
4. கைத்தறி துறை ஆணையர், சென்னை-108.
5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி), சென்னை-7.
6. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம், சென்னை-108.
7. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர், சென்னை-32.
8. தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சென்னை-108.
9. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர், சென்னை-6.
10. வேளாண்மைத் துறை ஆணையர், சென்னை-5.
11. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இயக்குநர், சென்னை-15
12. ஊரக வளர்ச்சி பஞ்சாயத்து ராஜ் இயக்குநர், சென்னை-15.
13. பட்டுவளர்ச்சித் துறை இயக்குநர், சேலம்-636 007.
14. இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள், சென்னை-113.
15. சர்க்கரைத் துறை ஆணையர், சென்னை-35.
16. தலைமைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-9
17. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை, சென்னை-9.
18. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
19. அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, சென்னை-9.
20. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை-9.
21. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை-9.
22. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை-9.
23. அரசு செயலாளர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-9.
24. அரசு செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, சென்னை-9.
25. அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலர்கள்.
26. அலுவலக இருப்புக் கோப்பு 2022.



Scanned with OKEN Scanner